Department of Justice Canada | Ministère de la Justice Canada

# விவாகரத்தும் மற்றும் குடும்ப வன்முறையும்

நபர் ஒருவர் தனது குடும்பத்திலுள்ள யாராவது ஒருவரை துஷ்பிரயோகம் செய்யும் போது குடும்ப வன்முறை நிகழ்கின்றது. சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் என்று பாராது குடும்ப வன்முறை எவருக்கும் நிகழலாம்.

குடும்ப வன்முறை வார்த்தைகளாகவும், செயல்களாகவும் அல்லது யாராவது ஒருவருக்கு தேவையான பராமரிப்பு வழங்கப்படாமையாகவும் கூட இருக்கலாம். இது ஒரு தனியாள் சம்பவமாக அல்லது ஒரு மீண்டெழும் நடத்தை மாதிரியாக இருக்கலாம்.

குடும்ப வன்முறை திருமண தம்பதிகள் திருமண பந்தத்திலிருந்து பிரிவதற்கு முன்னரும், பிரியும் போதும் அல்லது பிரிந்த பின்னரும் நிகழலாம். திருமண பந்தத்திலிருந்து பிரிந்த உடனே நபர்கள் அநேகமாக அடிக்கடி அதிக குடும்ப வன்முறைக்கு ஆளாகுவார்கள்.

உங்களுக்கு அல்லது நீங்கள் அறிந்த யாராவது ஒருவருக்கு அத்தகைய ஒரு வன்முறை ஆபத்து இருந்தால், உடனடியாக 9-1-1 எனும் இலக்கத்தை அழைக்கவும் அல்லது உங்களின் உள்ளூர் பொலிஸாரை தொடர்புகொள்ளவும்.

*விவாகரத்து சட்டத்திற்கு* அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆம் திகதி முதல் நடைமுறையிலிருக்கும். இவற்றில் சில பெற்றோர்களுக்கும், நீதிபதிகளுக்கும் மற்றும் குடும்ப வன்முறை நிகழ்ந்துள்ளது எனும் போது பாதுகாப்பான மற்றும் பொருத்தமான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் ஏனையவர்களுக்கும் உதவும் என எதிர்பார்க்கப்படும் மாற்றங்களாகும்.

## இந்தப் பக்கத்தில்

- குடும்ப வன்முறைக்கு புதிய *விவாகரத்து சட்டத்தின்* கீழுள்ள ஏற்பாடுகள்

Canada

- குடும்ப வன்முறை உதாரணங்கள்
- பலவந்தமாக கட்டுப்படுத்தும் குடும்ப வன்முறை
- குடும்ப வன்முறை மற்றும் பிள்ளைகளுக்கான பெற்றோர் கடமை ஏற்பாடுகள்
- ஒரே நேரத்தில் நீதி முறைமைகளின் பல பிரிவுகளிலும் சம்பந்தப்படும் குடும்பங்கள்
- குடும்ப வன்முறைக்கு எதிரான உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்

முதலிய அம்சங்கள் உள்ளடங்கியிருக்கும்.

## குடும்ப வன்முறைக்கு புதிய விவாகரத்து சட்டத்தின் கீழுள்ள ஏற்பாடுகள்

குடும்ப வன்முறை பல வடிவங்களில் நிகழலாம். இத்தகைய வன்முறை:

- மக்கள் அதனை நேரடியாக அனுபவித்தால்
- அதனை பார்த்தால் அல்லது கேட்டால்
- அது நிகழ்வதை அறிந்தால்

என்ன, அறியாவிட்டாலென்ன மக்களுக்கு தீங்காக அமையும்.

புதிய *விவகாரத்து சட்டத்தின்* கீழ், குடும்ப வன்முறை என்பது ஏதாவது நடத்தையைக் கருதும். அது:

- வன்முறையாக, அல்லது
- அச்சுறுத்தலாக, அல்லது
- பலவந்தமாக கட்டுப்படுத்தும் ஒரு நடத்தை மாதிரியாக, அல்லது
- குடும்ப அங்கத்தவர் ஒருவரின் பாதுகாப்புக்கு அல்லது ஏனைய நபர் ஒருவரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் ஒரு நடத்தையாக இருக்கும்.

பல துஷ்பிரயோக வகைகள் குற்றவியல் குற்றங்களாகக் கருதப்படுகின்ற வேளையில், சில குற்றவியல் சாராத நடத்தைகளும் கூட *விவகாரத்து சட்டத்தின்* கீழ் இன்றும் குடும்ப வன்முறைகளாகக் கருதப்படுகின்றன.

பிள்ளைகள்:

- அவர்களில் நேரடியாக வன்முறையும் துஷ்பிரயோகமும் பிரயோகிக்கப்படுதல்
- யாராவது ஒருவர் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றார் என குடும்ப அங்கத்தவர் ஒருவர் கண்கூடாகப் பார்த்தல் அல்லது கேட்டல்
- குடும்ப அங்கத்தவர் ஒருவர் அச்சப்படுவதை அல்லது உடற்காயமுறுவதை பார்தத்ல்

போன்ற பல வழிகளில் குடும்ப வன்முறைக்கு ஆளாகலாம்.

இவை அனைத்தும் புதிய *விவாகரத்து சட்டத்தின்* கீழ் குடும்ப வன்முறைகளாகவும் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களாகவும் கருதப்படுகின்றன.

## குடும்ப வன்முறை உதாரணங்கள்

புதிய *விவாகரத்து சட்டத்தின்* கீழ் கருதப்படும் சில குடும்ப வன்முறை உதாரணங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

| உடல் சார்ந்த துஷ்பிரயோகம் |
|---|
| குத்துதல், கன்னத்தில் அறைதல், உதைத்தல், அடித்துத் தள்ளிவிடுதல், இழுத்துப்புறட்டுதல், கசப்படையச்செய்தல், கூந்தலைப்பிடித்து இழுத்தெறிதல், கடித்தல், கடுமையாகக் காயப்படுத்துதல், வெளியே செல்லாமல் யாராவது ஒருவரை அடைத்து வைத்தல், யாராவது ஒருவரைப் பிடித்து வைத்தல் அல்லது துன்புறுத்த முயற்சித்தல்.<br><br>*தம்மை அல்லது மற்றொருவரை பாதுகாப்பதற்காக மக்கள் ஏதாவது செயல்களை செய்தால், அவர்களின் அத்தகைய செயல்கள் குடும்ப வன்முறைகளாகக் கருதப்படாது. |
| பாலியல் துஷ்பிரயோகம் |
| யாராவது ஒருவரை விருப்பமின்றி பாலியல் நோக்கத்திற்காக தொடுதல், யாராவது ஒருவரை பாலியலில் ஈடுபடுவதற்கு அல்லது பாலியல் செயலை செய்வதற்கு வற்புறுத்துதல், யாராவது ஒருவருக்கு ஆபாசப் படங்களைக் காட்டுதல், ஒரு பிள்ளையை பாலியல் உணர்வுடன் தொடுதல், ஒரு பிள்ளையை சுயமாக பாலியலுக்கு ஈர்க்கச்செய்தல். |

| |
|---|
| மற்றய நபருக்கு அவரை கொல்வதாக அல்லது உடற்காயம் ஏற்படுத்துவதாக கூறும் அச்சுறுத்தல்கள் |
| யாராவது ஒருவரை அடிப்பதாக அல்லது குத்துவதாக அச்சுறுத்துதல், யாராவது ஒருவரை துப்பாக்கியால் சுடுவதாக மிரட்டுதல். |
| துன்புறுத்துதல் மற்றும் தொந்தரவு செய்தல் |
| விருப்பமின்றி யாராவது ஒருவருக்கு மீண்டும் மீண்டும் தொலைபேசி மூலமாக அழைப்பு விடுத்தல், மின்னஞ்சல் ஊடாக செய்திகளை அனுப்புதல் அல்லது செய்திகளை டெக்ஸ்ட் பண்ணுதல், யாராவது ஒருவரைப் பின்தொடர்தல் அல்லது அவரின் வீட்டை அல்லது பணி நிலையத்தை உற்றுக்கவனித்து வருதல், அப்கள், மென்பாக வசதிகள் அல்லது வீடியோ கெமராக்கள் ஆகியவற்றின் மூலமாக யாராவது ஒருவரைக் கண்காணித்தல், யாராவது ஒருவரின் செயற்பாடுகளை இடைமறித்து படமாகப் பிடித்து சமூக ஊடகங்களில் வெளியிடுதல். |
| வாழ்க்கைத் தேவைகளை வழங்குவதற்குத் தவறுதல் |
| பிள்ளைகளுக்கு உணவுகளை வழங்காதிருத்தல், மருத்துவப் பராமரிப்பு தேவையான யாராவது நபருக்கு அத்தகைய மருத்துவப் பராமரிப்பை வழங்காதிருத்தல், யாராவது ஒருவரின் தள்ளுநாற்காலியை வெளியால் எடுத்துவைத்தல் . |
| உடல் சார்ந்த துஷ்பிரயோகம் |
| எப்பொழுதும் அடித்துத் துன்புறுத்துதல், யாராவது ஒருவரை கடிந்துபேசுதல் அல்லது இழிவாகப் பார்த்தல், யாராவது ஒருவரின் கால நேரம், நடவடிக்கைகள், உடைகள், தலைமுடி அலங்காரம் என்பவற்றைக் கட்டுப்படுத்துதல், யாராவது ஒருவர் நண்பர்களை அல்லது குடும்ப உறவினர்களை பார்ப்பதைத் தடுத்தல், யாராவது ஒருவர் அவரின் சமயத்தை அல்லது காலாசாரத்தை பின்பற்றுவதைத் தடுத்தல், நபர் ஒருவருடன் மிக நெருங்கி எடுத்த புகைப்படங்களை அவரின் விருப்பமின்றி பகிர்ந்துகொள்ளல் அல்லது அவ்வாறு நெருங்கி புடைப்படங்களை எடுக்குமாறு |

| |
|---|
| அச்சுறுத்துதல், குடிவரவு அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு நபர் ஒருவரை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு அச்சுறுத்துதல். |
| நிதி சார்ந்த துஷ்பிரயோகம் |
| வேலை செய்யுமாறு யாராவது ஒருவரை வற்புறுத்துதல் அல்லது அத்தகைய நபர்கள் வேலை செய்வதைத் தடுத்தல், யாராவது ஒருவரை அவரின் வங்கிக் கணக்கை அணுகிப் பார்ப்பதைத் தடுத்தல், யாராவது ஒருவரிடமிருந்து பணத்தைப் பிடித்துவைத்தல் அல்லது அத்தகைய ஒருவர் செலவு செய்யும் விதத்தைக் கட்டுப்படுத்துதல், யாராவது ஒருவரின் பெயரில் அவருக்கு தெரியாமல் கடன் பொறுப்புக்களை சுமத்துதல். |
| ஒரு பிராணியை கொல்வதாக அல்லது அதற்கு தீங்கு விளைவிப்பதற்தாக அல்லது சொத்துக்களை சேதப்படுத்துவதாக கூறும் அச்சுறுத்தல்கள் |
| குடும்ப செல்லப்பிராணிகளுக்கு தீங்குவிளைவிப்பதாக அல்லது அத்தகைய பிராணிகளைக் கொல்வதாக அச்சுறுத்துதல், வசிக்கும் வீடுகளுக்கு தீவைப்பதாக அச்சுறுத்துதல். |
| உண்மையாக குடும்ப செல்லப் பிராணிகளுக்கு தீங்கு விளைவித்தல் அல்லது அத்தகைய பிராணிகளைக் கொல்லுதல் அல்லது சொத்துக்களை சேதப்படுத்துதல். |

## பலவந்தமாக கட்டுப்படுத்தும் குடும்ப வன்முறை

மற்றைய குடும்ப அங்கத்தவரை கட்டுப்படுத்துவதற்கு அல்லது அத்தகைய குடும்ப அங்கத்தவர் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு நபர்கள் பயன்படுத்தும் ஒரு துஷ்பிரயோக நடத்தை மாதிரி, பலவந்தமாக கட்டுப்படுத்தும் குடும்ப வன்முறையாகும். மற்றைய குடும்ப அங்கத்தவரை கட்டுப்படுத்துகின்ற குடும்ப அங்கத்தவர் ஒருவர், துணைவர் அணியும் ஆடைகளைத் தேர்ந்தெடுத்தல், துணைவர்களின் நிதி விடயங்களைக் கட்டுப்படுத்துதல், அல்லது அவர்களை வேலைசெய்யாமல் தடுத்தல் அல்லது நண்பர்களை பார்ப்பதிலிருந்து அவர்களைத் தடுத்தல் போன்ற உணர்வியல், உளவியல், பாலியல், நிதியியல் அல்லது ஏனைய இணைந்த பல வகையான துஷ்பிரயோகங்களைப் பிரயோகிக்கக்கூடும். இத்தகைய துஷ்பிரயோகமும் அநேகமாக உடல் துன்புறுத்தலுடன் சம்பந்தப்படும்.

பலவந்தமாக கட்டுப்படுத்தும் குடும்ப வன்முறை மிகவும் ஆபத்தானதாகும். இத்தகைய துஷ்பிரயோகத்தை செய்யும் நபர்கள் திருமண பந்தத்திலிருந்து பிரிந்த அல்லது விவகாரத்து செய்த பின்னரும் அடிக்கடி தொடர்ந்து செய்வார்கள் அல்லது குடும்ப வன்முறையை அதிகரிக்கச்செய்வார்கள்.

## குடும்ப வன்முறை மற்றும் பிள்ளைகளுக்கான பெற்றோர் கடமை ஏற்பாடுகள்

குடும்ப வன்முறைக்கு உட்பட்டு வாழுகின்ற பிள்ளைகள் குறுங்கால மற்றும் நீண்டகால தீங்குகள் அடிப்படையில் அதிக ஆபத்துக்களுக்கு உள்ளாகுகின்றனர்.

குடும்ப வன்முறையை பிள்ளைகள் நேரடியாக அனுபவிக்காவிட்டாலும் கூட, மற்றைய குடும்ப அங்கத்தவர்களுக்கு இடையில் வன்முறையை பார்ப்பது அல்லது காணுவது அல்லது ஒரு குடும்ப அங்கத்தவர் ஒருவர் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை அறிவது பிள்ளைகளுக்கு நல்லதல்ல.

குடும்ப வன்முறையை அனுபவிக்கின்ற பிள்ளைகள் உடலியல் மற்றும் உளவியல் தீங்குகளால் துன்பப்படலாம். குடும்ப வன்முறை பிள்ளைகளின் மூளை விருத்தியில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும். இது நீண்ட காலத்திற்கு நீடிக்கக்கூடிய சாத்தியமான உணர்வியல் மற்றும் உளவியல் ரீதியான பிரச்சினைகளும், நடத்தை சார்ந்த பிரச்சினைகளும் மற்றும் சமூகப் பிரச்சினைகளும் அதிகரிக்கவும் கூட வழிவகுக்கும்.

குடும்ப சட்டத்தைப் பொறுத்த வரையில், பிள்ளைகளைப் பற்றிய சகல தீர்மானங்களும் அந்தப் பிள்ளைகளின் அதிக நலன்கள் அடிப்படையில் அமைந்திருக்கும். ஒரு பிள்ளையின் சிறந்த நலன்கள் எவை என தீர்மானிக்கும் போது நீதிபதிகள் கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்களை உள்ளடக்கிய ஒரு பட்டியல் புதிய *விவாகரத்து சட்டத்தில்* உள்ளது. ஒரு பிள்ளையின் உடலியல், உணர்வியல், உளவியல் பாதுகாப்பும் மற்றும் நலனும் மிக முக்கியமான விடயங்களாகும்.

## நீதிபதிகள் கருத்திற்கொள்ள வேண்டிய விஷேட விடயங்கள்

பிள்ளைகளின் பெற்றோர்கள் விகாரத்து செய்யும் போது அந்தப் பிள்ளைகளுக்கான பெற்றோர் கடமை ஏற்பாடுகளில் தாக்கம் செலுத்தும் குடும்ப வன்முறையின் தாக்கத்தை கட்டாயம் கருத்திற்கொள்ள வேண்டும். பிள்ளைக்கான பராமரிப்புப் பொறுப்பை மீறிய நபரின் ஆற்றலும் மற்றும் விருப்பமும் அதே போல் மற்றைய பெற்றாருடனான ஒத்துழைப்பும் இதில் அடங்கும்.

புதிய *விவகாரத்து சட்டம்*

- துஷ்பிரயோகத்தின் தன்மை, அதன் கடுமையான போக்கு மற்றும் அது நிகழும் விதம்
- பிள்ளைகளுக்கு ஏற்படும் தீங்கான ஆபத்து
- வன்முறையில் ஈடுபடுகின்ற நபர் மேலும் வன்முறையைத் தடுப்பதற்கும் மற்றும் தனது பிள்ளைகளை அல்லது துணைவரை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியுள்ள நபருக்கான பெற்றோர் கடமைகள் பற்றிய ஒரு பாடநெறியைப் பின்பற்றி நிறைவுசெய்தல் போன்ற அவரின் பெற்றோர் கடமைகளை மேம்படுத்துவதற்கும் ஏதாவது நடவடிக்கைகளை எடுத்துள்ளாரா

என்பன போன்ற குடும்ப வன்முறையின் தாக்கத்தைக் கருத்திற்கொள்ளும் போது நீதிபதிகள் கவனிக்க வேண்டிய விடயங்களை பட்டியல் படுத்தியுள்ளது.

பிள்ளைகளின் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் நலன் என்பவற்றுடன் தொடர்பான ஏதாவது நீதிமன்ற விடயங்களையும் நீதிபதிகள் கருத்திற்கொள்ள வேண்டும்.

- ஒரு பிள்ளையை அடித்துத் துன்புறுத்தியதற்கான குற்ற அபிப்பிராயங்கள்
- ஒரு பிள்ளை தொடர்பான பிள்ளைப் பாதுகாப்பு உத்தரவுகள்
- மற்றைய குடும்ப அங்கத்தவருக்கு எதிரான ஒரு குற்றம் தொடர்பான குற்ற அபிப்பிராயங்கள் என்பன இதில் அடங்கும்.

## குடும்ப வன்முறைக்கான சான்று

ஒரு நீதிபதி குடும்ப வன்முறையை கருத்திற்கொள்ள வேண்டுமானால் அந்த வன்முறை நிகழ்ந்ததற்கான சான்று

நிறூபிக்கப்படுதல் வேண்டும். குடும்ப வன்முறை அநேகமாக தனிப்பட்ட முறையில் நிகழ்வதால் அத்தகைய குடும்ப வன்முறையை நிறூபிப்பது கடினமானதாகும். இங்கு வன்முறைக்கான சில சான்று உதாரணங்கள் காணப்படுகின்றன.

- 9-1-1 அழைப்புகள்
- வன்முறையை அனுபவித்துள்ள, பார்த்துள்ள, அல்லது கேட்டுள்ள அல்லது துஷ்பிரயோகத்தின் பாதிப்புகளை கண்டுள்ள நபர்களிடமிருந்து நீதிமன்றத்தில் கிடைக்கும் எழுத்திலான வாக்குமூலங்கள் அல்லது சான்றுகள்
- உடற் காயங்களின் புகைப்படங்கள்
- குற்ற நிகழ்வுகளின் பதிவுகள்
- மருத்துவ அல்லது வைத்தியசாலை அறிக்கைகள்

## ஒரே நேரத்தில் நீதி முறைமைகளின் பல பிரிவுகளிலும் சம்பந்தப்படும் குடும்பங்கள்

சில சந்தர்ப்பங்களில், குடும்பங்கள் ஒரே நேரங்களில் வித்தியாசமான நீதிமன்றங்களில் சம்பந்தப்படுவதற்கு நேரிடலாம். குற்றவியல் நீதி முறைமை, சிறுவர் பாதுகாப்பு முறைமை, மற்றும் குடும்ப நீதி முறைமை என்பன சம்பந்தப்படும் போது, குடும்ப வன்முறை விடயங்களில் இது அநேகமாக காணக்கூடியதாக இருக்கும்.

இந்த நிலைமைகள் மிகவும் சவால் வாய்ந்ததாக இருக்கலாம். உதாரணமாக, ஒரு குடும்ப நீதிமன்றம் பெற்றோர்களுக்கு இடையில் தொடர்பு இருக்க முடியாது என கூறுகின்ற ஒரு குற்றவியல் உத்தரவு பற்றி அறியாதிருப்பதால், முரண்படும் ஒரு பெற்றோர் கடமை உத்தரவை நீதிபதி பிறப்பிக்கக்கூடும். இது இரண்டு உத்தரவுகளையும் பின்பற்றுவதை சாத்தியமற்றதாக்கும் அல்லது கடினமாக்கும் என்பதுடன் பாதுகாப்பு சார்ந்த ஆபத்துக்களையும் தோற்றுவிக்கும்.

இதனை கையாளுவதற்கு உதவும் நிமித்தம், *விவாகரத்து சட்டம்* ஏதாவது நடைமுறை அல்லது நிறைவுபெறாத சிவில் பாதுகாப்பு, சிறுவர் பாதுகாப்பு அல்லது குற்றவிடயல் நடவடிக்கைகள் அல்லது விவகாரத்து செய்கின்ற தம்பதிகள் தொடர்பான ஏதாவது நீதிமன்ற உத்தரவுகள் இருக்கின்றனவா என்ற அம்சங்களை நீதிபதிகள் கருத்திற்கொள்ள வேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றது.

நீங்கள் விவாகரத்து செய்தவர்களாக அல்லது விவாகரத்து செய்கின்றவர்களாக மற்றும் பெற்றோர் கடமைகள், பிள்ளைகளுக்கான உதவி அல்லது துணைவர்களுக்கான உதவி என்பவற்றுக்கு ஒரு நீதிமன்ற உத்தரவை கோருபவராக இருந்தால், ஏதாவது குற்றவியல் அல்லது சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான வழக்குகள், உங்களுடன் அல்லது உங்களின் முன்னாள் துணைவருடன் சம்பந்தப்படும் உத்தரவுகள், அல்லது உங்களில் ஒருவருக்கு எதிரான ஏதாவது எச்சரிக்கை அல்லது பாதுகாப்பு தொடர்பான உத்தரவுகள் பற்றி நீங்கள் நீதிமன்றத்திற்கு கூறுவது அவசியமாகும்.

## குடும்ப வன்முறைக்கு எதிரான உதவிகைளப் பெற்றுக்கொள்ளல்

**உங்களுக்கு அல்லது நீங்கள் அறிந்த யாராவது ஒருவருக்கு அத்தகைய ஒரு வன்முறை ஆபத்து இருந்தால், உடனடியாக 9-1-1 எனும் இலக்கத்தை அழைக்கவும் அல்லது உங்களின் உள்ளூர் பொலிஸாரை தொடர்புகொள்ளவும்.**

நீங்கள் குடும்ப வன்முறையை கையாளுபவர்களாக இருப்பின், பல நபர்களும் மற்றும் நிறுவனங்களுக்கும் உங்களுக்கு உதவலாம். உதாரணமாக, நீங்கள் ஒரு சட்டத்தரனியிடம், ஒரு மருத்துவரிடம், ஒரு சமூகப் பணியாளரிடம் அல்லது ஒரு ஆலோசகரிடம் கதைக்கலாம். உங்களுக்கு அருகில் இருக்கின்ற பாதிக்கப்பட்டவர்களுக்கு சேவைகளை வழங்கும் நிலையங்களிடமிருந்தும், சமுதாய அமைப்புகளிடமிருந்தும், ஆதரவு அளிக்கும் குழுக்களிடமிருந்தும், பொலிஸாரிடமிருந்தும், உதவிகளை வழங்க முன்வரும் தரப்புகளிடமிருந்தும், புகலிடம் அளிப்பவர்களிடமிருந்தும் அல்லது பரிவர்த்தனை நிலையங்களிடமிருந்தும் நீங்கள் உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

குடும்ப வன்முறையும் மற்றும் உதவிகளைப் பெற்றுக்கொள்ளலும் பற்றிய மேலதிகமான தகவல்களுக்கு, தயவுசெய்து கனடாவின் நீதி இலாக்காவினது இணையத்தளத்திலுள்ள இந்த வள வசதிகளைப் பார்க்கவும்.

- குடும்ப வன்முறை
- குடும்ப வன்முறைக்கு எதிரான உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்

- துஷ்பிரயோகம் தவறானது
- ஏதாவது ஒரு மொழியில் தூசிப்பது தவறானது
- ஏதாவது கலாசாரத்தில் துஷ்பிரயோகம் தவறானது:இனுயிட்
- ஏதாவது ஒரு கலாசாரத்தில் துஷ்பிரயோகம் தவறானது: முதல் நாடுகளுக்கும் மற்றும் மெய்ட்டிஸ் மக்களுக்கும்
- சிறுவர் துஷ்பிரயோகம் தவறானது: என்னால் என்ன செய்யலாம்?
- உங்களுக்கு அருகிலுள்ள பாதிக்கப்பட்ட நபர்களுக்கு சேவை வழங்கும் நிலையங்களை தேடிக்கண்டுகொள்ளுங்கள்